1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக்க நன்றி. ஆனால் ஒன்றை சற்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதுள்ள முகவர்களுக்கே, அவர்கள் கேட்கின்ற அளவுக்குப் பால் கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் விற்பனையாளர் சங்கத்தினுடைய மேலாண்மை இயக்குநரை தொடர்பு கொள்கிறபோது, எவ்வளவு பால் வேண்டுமானாலும் பாலிதீன் பைகளில் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் முகவர்களைக் கேட்டால், நாங்கள் கேட்கிற அளவுக்கு எங்களுக்குப் பால் கிடைப்பதில்லை என்றே முகவர்கள் கூறுகிறார்கள். இதிலே ஏதோ தவறு நடக்கிறது. இதைக் கண்டுபிடித்து, தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *330*, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

330—

கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் திட்டம்.

26940*—திரு வெ. **பழனிசாமி:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் டையிங், பிளிச்சிங் பேக்டரி கழிவு நீரை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சுத்தப்படுத்தப்படும் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) இத்திட்டத்திற்கான மத்திய, மாநில அரசின் ஒதுக்கீடு தொகை எவ்வளவு?

(இ) இந்த நிதியாண்டில் திட்டம் துவங்குவதற்கான வாய்ப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 200 சலவைத் தொழிற்சாலைகளும் அதாவது பிளீச்சிங் ஃபேக்டரீசும், சுமார் 500 சாயப்பட்டறைகளும் அதாவது டையிங் ஃபேக்டரீசும் உள்ளன. இவைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்திகரிக்க 10 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு அதற்காக 10 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதற்கான இடங்களும் தெரிவு செய்யப்பட்டு, ரூபாய் 40 கோடி செலவில் 10 நிலையங்களுக்கும் திட்ட அறிக்கை இறுதியாக்கப்பட்டு, நாக்பூரிலுள்ள தேசிய சுற்றுப்புறச்சூழல் பொறியியல் மையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஒப்புதல் பெறப்பட்டதும் திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

(ஆ) ஒரு சுத்திகரிப்பு நிலையத்தின் மொத்த திட்டச் செலவில் மாநில அரசு 25 சதவீதமும், மத்திய அரசு 25 சதவீதமும் மானியமாக அளிக்கும். மீதி 50 சதவீதத்தில், 20 சதவீதத்தை உறுப்பினர்களும், 30 சதவீதத்தை நிதிநிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

(இ) தேசிய சுற்றுப்புறசூழல் பொறியியல் ஆய்வு மையத்தின் ஒப்புதல் கிடைத்தவுடன் இந்த ஆண்டிலேயே நிர்மாணப் பணிகளைத் தொடங்க மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் டையிங் & பிளீச்சிங் பேக்டரியினுடைய கழிவு நீரை சுத்தப்படுத்துகிற திட்டம் கடந்த மூன்று ஆண்டுக்காலமாக அரசினுடைய ஆய்விலே இருந்து வருகிறது. முதல் கட்டமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிப்பில் டெண்டர் விடுகின்ற நிலையில் மத்திய அரசு மானியத்தை குறைவாக தருகிற காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் அந்தத் திட்டம் நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. 15, 20 கோடி ரூபாய் மதிப்பீடு என்று இருந்தது, தற்போது 40 கோடி ரூபாய் மதிப்பீடு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, தாமதம் ஏற்படுகிற சூழ்நிலையின் காரணமாக மதிப்பீடு அதிகம்

1995 ஏப்ரல் 18]

வருவதற்குண்டான வாய்ப்பு உருவாகிறது. இதற்கு மத்திய மாநில அரசுகளுடைய நிதியிலிருந்து கொடுத்தாலும்கூட, அதிலே நிர்வாகத்தினர் அதிக நிதி ஆதாரம் இல்லாமல், அதை ஏற்று செயல்படுத்த முடியாத சிரமத்திற்கு ஆட்படுவார்கள். ஆகவே இவ்வாண்டு உறுதியான முறையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உண்டான வாய்ப்பு உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் *1990–91* ஆம் ஆண்டு *3* பிரிவுகளாக அந்தப் பணி அங்கே துவக்கப்பட்டது. அதற்குப் பிறகு, மத்திய அரசு தாம் அளிக்கின்ற மானியத் தொகையை *25* சதவீதத்திற்கு மேல், அதாவது, மேக்ஸிமம் *50* இலட்சம் என்று உச்சவரம்பை விதித்து விட்டது. ஆகவே, அதனை மூன்று பிரிவுகளாக வைத்தால் பயனீட்டாளர்களுக்குச் செலவு அதிகமாகும் என்ற காரணத்தினால், *10* நிறுவனங்களாக அதைப் பிரித்தால், மானியத் தொகை அதிகம் கிடைக்கும் என்ற காரணத்தினால், இப்போது *10* பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் *2* அல்லது *3* கோடி ரூபாய் செலவு ஆகும் என்று திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்போது அதனை நாக்பூரில் உள்ள NEERI என்று சொல்லப்படுகின்ற, தேசிய சுற்றுப்புறச் சூழல் பொறியியல் ஆய்வு மையத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் வெகுவிரைவில் கிடைக்கும். கிடைத்தவுடன் இந்த ஆண்டிலேயே அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம், திருப்பூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த *700* தொழிற்சாலைகளை உள்ளடக்கிய இந்தத் திட்டம் மிக விரைவாக செயல்படுத்தப்படுவதன் மூலமாக நொய்யல் ஆற்றினுடைய படுகைகள் பாதிக்கப்படுகின்ற பெருந்துறை, காங்கேயம் போன்ற பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கடுமையாக பாதிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள். ஆகவே, போர்க்கால நடவடிக்கையாக இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத் திட்டத்தின் மூலமாக வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரினால் குடிதண்ணீர் ஆதாரம் பாதிக்கப்படுமா; நச்சுத் தன்மை எந்த அளவுக்கு அதிலிருந்து எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே சாயப்பட்டறை, சலவைப் பட்டறை மூலம் வெளியேறும் கழிவுநீர் நொய்யல் ஆற்றில் கலக்கப்படுவதன் காரணமாக காங்கேயம், திருப்பூர், வெள்ளக்கோயில் பகுதிகள் மட்டுமல்ல, என்னுடைய பகுதியாக இருக்கிற கரூர் பகுதியும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு, சுத்தம் செய்யப்படும்போது, முழுமையாக, நூற்றுக்கு நூறு சதவீதம் சுத்தம் செய்யப்பட்டு, எந்தக் காரணத்தைக் கொண்டும் நிலத்தடி நீர் பாதிக்கப்படாத அளவுக்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். துரைமுருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரினுடைய நச்சுத் தன்மை எந்த அளவு குறைகிறது; அப்படி சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரை விவசாயத்திற்கோ அல்லது குடிப்பதற்கோ மீண்டும் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுத்திகரிப்புச் செய்யும்போது மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு நிர்ணயம் வைத்திருக்கிறார்கள். அதாவது, COD, BOD என்று வைத்திருக்கிறார்கள். அந்த அளவில்தான் இருக்க வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியம் மாதம் ஒருமுறை, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை அவர்கள் அங்கே சென்று அதனைச் சோதனை செய்வார்கள். மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயிக்கின்ற விதிமுறைகளுக்கு உட்பட்டு, கழிவுநீர் சுத்தம் செய்யப்படும்போது நிச்சயமாக அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. மாணிக்கம்.

திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் 500–க்கும் மேற்பட்ட டையிங், பிளிச்சிங் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த டையிங், பிளிச்சிங் பேக்டரிகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரை

1995 ஏப்ரல் 18]

மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் சுத்திகரிப்பு செய்யும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு பற்றி கேட்டிருக்கிறார்கள். இது திருப்பூர் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால் அவர், அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி, நீங்கள் திருப்பூர்பற்றிக் கேட்பதாக இருந்தால் கேட்கலாம்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீரை பேக்டரியிலிருந்து அனுப்பும்போது ஆற்றிலே விடுகின்ற பழக்கம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. சில இடங்களில் அப்படி வெளியேற்றப்படும்போது அந்தத் தண்ணீர் கலர் மாறி, கருப்பு நிறமாகவோ அல்லது வேறு நிறமாகவோ வருகின்ற காரணத்தினால் பொதுமக்களுக்கு அதைப் பார்க்கும்போது, அச்சம் ஏற்படுகிறது. குறிப்பாக, விஸ்கோஸ் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர் அப்படித்தான் வருகிறது. ஆகவே, கழிவுநீரை ஆற்றிலே விடாமல் வேறு நிலங்களில் அவற்றைப் பாய்ச்சுகின்ற அளவுக்கு, மாற்று நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது திட்டம் இதற்காக தீட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர், எங்கெல்லாம் ஆறு அல்லது வாய்க்கால், அல்லது ஏரிகளில் கலக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் அது கலக்கக்கூடாது என்பதற்காக, மாசுக்கட்டுப்பாடு வாரியம், அந்தத் தொழிற்சாலையின் மீது நடவடிக்கை எடுத்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், எந்த இடத்தில் அவ்வாறு நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அந்தத் தொழிற்சாலைமீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1995 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளீச்சிங் தொழிற்சாலையிலிருந்து பிளீச்சிங் கழிவுநீர் வெளியேறுவதைப்போல, தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரினால் குடியிருப்புப் பகுதிகளிலே வசிக்கும் மக்களுக்குச் சுகாதாரக் கேடு ஏற்படுவதை அரசு அறியுமா? அதேபோல், நிலத்தடி நீர் மாசுப்படுவதை அரசு அறிந்து, அதுகுறித்து மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் பணிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொழிற்சாலையிலிருந்தும் வெளியேறுகிற கழிவு நீரினால், சுற்றுப்புற பாதிப்பு ஏற்பட்டாலும், அவ்வாறு ஏற்படுகிறபோது, அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே, திருவெறும்பூர் பகுதியிலே இருக்கிற தோல் தொழிற்சாலையைப் பற்றிதான் மனதிலே வைத்துக் கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர் காரணமாக, அந்தப் பகுதியிலே இருக்கிற நிலத்தடி நீர் பாதிக்கப்படக்கூடாது என்கிற காரணத்தை முன்னிட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம், அங்கே இருக்கிற தோல் தொழிற்சாலைகள் அனைத்தும் சேர்ந்து, பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இப்போது அதற்கான திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் டையிங், பிளீச்சிங் பேக்டரியிலிருந்து வருகிற கழிவுநீர், நொய்யல் ஆற்றில் கலப்பதன் காரணமாக, அரவக்குறிச்சித் தொகுதியிலும் சரி, கரூர் பகுதியிலும் சரி, விவசாயத்திற்காகத் தண்ணீரைப் பயன்படுத்தும்போது, அந்தக் கழிவுநீர், கருப்புக் கலரில் கலந்து வருவதால், விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது; 'போர்–வெல்' போட்டாலும், நிலத்தடி நீரில் அது கலந்தும் விடுகிறது. எனவே, இத்தகைய கழிவுநீரால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து நான் விரிவாக பதில் சொல்லியிருக்கிறேன். திருப்பூரிலே இருக்கிற 500-க்கும் மேற்பட்ட சாயப் பட்டறைகள், 200-க்கும் மேற்பட்ட சலவைப்பட்டறைகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர், நொய்யல் ஆற்றிலே கலக்கப்படுகிறது என்பது உண்மை. அதன் காரணமாக, நொய்யல் வாய்க்காலில் அந்தத் தண்ணீர் கலக்கப்பட்டு, காங்கேயம் பகுதி, வெள்ளக்கோயில் பகுதி, அரவக்குறிச்சிப் பகுதி, கரூர் பகுதி ஆகியவையெல்லாம், அந்தத் தண்ணீரால் கேடு விளைவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, திருப்பூரிலே இருக்கிற சாயப் பட்டறைகள் மற்றும் சலவைப் படடறைகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை சுத்திகரிப்பு செல்வதற்காக, 10 பிரிவுகள் அங்கே துவங்கப்பட, தேசிய சுற்றுப்புறச் சூழல் ஆய்வு மையத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி கிடைத்தவுடன், வெகுவிரைவிலே, அந்தப் பணிகள் தொடங்கப்படும். அப்போது, இந்தக் கேடுகள் எல்லாம் இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளிலுள்ள சாயப்பட்டறைகளினுடைய தண்ணீரானது, காவிரி ஆற்றில் கலக்கப்படுகிறது. இதுபோன்ற தனியார் நிறுவனங்கள் நடத்துகிற தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகிற கழிவுநீரை, அவர்களே சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு வழியிலே சுத்திகரிப்பதற்குக்கூட இயலாமல், அவர்கள் தடையாணை பெற்று, அந்தத் தொழிற்சாலையை நடத்துகிறார்கள். எனவே, அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரானது, காவிரி ஆற்றில் கலக்காமல் இருப்பதற்கு, அரசு கண்டிப்பான உத்தரவுகள் ஏதாவது பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள், தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை, மாதம் ஒருமுறை அல்லது 2 மாதங்களுக்கு ஒரு முறை, அங்கேபோய் ஆய்வு செய்கிறார்கள். அப்படி ஆய்வு செய்கிறபோது, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர், சுத்திகரிப்பு நிலையங்களுக்குப் போய், வெளியே போகிறபோது, அந்தக் கழிவுநீரானது, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் விதிக்கிற

நிபந்தனைகளுக்குட்பட்டு இல்லாமல் இருக்குமானால், அவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுத்து, அந்த ஆலைகளை மூடி, இயங்காமல் செய்வதற்கான பணிகளை எல்லாம் இந்த அரசு செய்து கொண்டு வருகிறது. ஆகவே, உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த ஆலையின்மீது புகார் வருமேயானால், உரிய நட்வடிக்கையை அரசு எடுக்கும். இல்லையென்றால், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் எடுத்துச் சொல்லி, அந்த ஆலையை நாளைக்கே சென்று பார்த்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். *331,* திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண். *332,* திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

332—

தொட்டியம் தொகுதியில் நூற்பாலை அமைத்தல்

36619*—திரு என். ஆர். சிவபதி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் ஒரு நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10–45

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். தாத்தையங்கார்பேட்டையில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள். மேலும் அவர்களில் பெரும்பாலோர் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இப்பகுதியில் நெசவுக்குத் தேவையான நூல், பாகு மற்றும் மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மீண்டும்